**2021ஆம் வருடம் நவம்பர் மாதம் 17.11.2021ம் நாள் புதன் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள அவசர கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை :திருமதி. எஸ்...சித்ரா எம்.காம்.,பி.எட்**
**ஆணையாளர், தருமபுரி நகராட்சி**

**பொருள் எண் : 1**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.16341/2021/இ1 நாள் 28.09.2021அவகளின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள மண் சாலைகளை புதிய தார் சாலைகள் அமைக்க விரிவான திட்ட அறிக்கையுடன் உள்ளடக்கிய கருத்துருவினை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது.

எனவே, தருமபுரி நகராட்சி பகுதிகளில் உள்ள கீழ் கண்ட தார்சாலைகளை **ரூ.212.60லட்சம்** மதிப்பீட்டில் அமைக்க விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்கநர் சென்னை அவர்களின் உரிய நிர்வாக அனுமதிக்கு அனுப்பப்பட்டதின் பெயரில், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித **ந.க.எண்**.20543/2021/P2 **நாள்**.16.11.2021 கடிதத்தில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பெயரில்,கீழ்கண்ட தார்சாலைகள் அமைக்கும் பணிக்கு உரிய தொழில்நுட்ப அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவகளின் அனுமதி கோர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | சிப்பங்களின் விவரம் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | சிப்பம்-1 | வார்டு எண் 10 டி.என்.வி.நகர்,சாலைகளை தார்சாலையாக அமைத்தல் (**மெயின் ரோடு மற்றும் கிராஸ்**.1,2,3,4,5,6,8,மற்றும்10) | 126.60**லட்சம்** |
| 2 | சிப்பம்-2 | வார்டு எண் 32 தண்டுபாதை சாலை குறுக்கு தெருக்களை தார்சாலையாக அமைத்தல் (**கிராஸ்**.1,2,3,4,மற்றும்7) | 86.00**லட்சம்** |
| | | **மொத்தம்** | **212.60லட்சம்** |

அலுவலக குறிப்பு

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2).நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20543/2021/P1 நாள்.16.11.2021 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண் : **2**

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021-2022ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது மாநகராட்சி, நகராட்சிகளில் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக உள்ளாட்சி அமைப்புகளில் நூலகங்கள் மற்றும் அறிவுசார்மையங்கள் ரூ.100கோடியில் மதிப்பீட்டில் நடப்பாண்டில் ஏற்படுத்தப்படும் என அறிவித்தள்ளார்கள்.**

**நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20027/2021/தி2 நாள் 08.09.2021ல் நகராட்சிகளில் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக உள்ளாட்சி அமைப்புகளில் நூலகங்கள் மற்றும் அறிவுசார்மையங்கள் அமைக்க விரிவான திட்ட அறிக்கையுடன் உள்ளடக்கிய கருத்துருவினை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டதின் பெயரில் தருமபுரி நகராட்சியில் கீழ் கண்ட இடத்தில் நூலகங்கள் மற்றும் அறிவுசார்மையங்கள் அமைக்க தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டதின் பெயரில் ரூ.100லட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு அனுப்பப்பட்டது.**

**நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் (திட்டங்கள்)சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20027/2021/தி2 நாள்.12.10.2021 கடிதத்தில் தருமபுரி நகராட்சிக்கு TYP-IIIன் கீழ் ரூ,2.50கோடியில் வடிமைப்பு மேற்கொள்ள நூலகங்கள் மற்றும் அறிவுசார்மையங்கள் அமைக்க உரிய திட்ட அறிக்கையினை தயார் செய்து அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.எனவே மேற்கண்ட ரூ,2.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள, அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவகளுக்கு உரிய மதிப்பீட்டினை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

| வ. எண். | நூலகங்கள் மற்றும் அறிவுசார்மையம் அமையும் இடம் | மதிப்பீடுத் தொகை ரூ.கோடியில் |
|---|---|---|
| 1 | தருமபுரி நகராட்சி வார்டு எண் 4 சந்தைபேட்டை வளாகம்,நகர புல எண்.3 வார்டு B பிளாக் எண்.19 | 2.50 |
| | மொத்தம் | 2.50 |

**<u>அலுவலக குறிப்பு-</u>**

1).மன்றம் அனமதிக்கலாம்.

2).நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20027/2021/தி2 நாள் 08.09.2021 கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

## பொருள் எண் : 3

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21191/2021/AMRUT-2.0 நாள்.25.10.2021ல் 15வது மத்திய நிதிக்குழு (TIED-UN-TIED GRAND) திட்டத்தின் கீழ் உள்ளாட்சி பகுதிகளில் மக்கள் தொகையின் அடிப்படையில் இரண்டு வகைகளாக பிரித்து பொது மக்களின் பயன்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட உள்ள குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள்,மழை நீர் வடிகால்,சிறுபாலம் கட்டுதல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் விபரங்களை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தருமபுரி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15வது மத்திய நிதிக்குழு (UN-TIED GRANT) திட்டத்தின் கீழ் 2020-2021ம் ஆண்டிற்கு ரூ.187.00லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21191/2021/அம்ரூட்2 நாள் 13.11.2021ல் நகராட்சிகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதிக்கு பணிகள் மேற்கொள்ள வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதை, தொடர்ந்து இந்நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட TIED GRANT 2021-2022க்கு ரூ.116.00லட்சத்தில் குடிநீர் திட்ட பணிகள்/திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் UN-TIED GRANT 2021-2022ம் ரூ.76.00லட்சத்தில் குடிநீர் திட்ட பணிகள்/திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.192.00லட்சத்தில் பணிகள் மேற்கொள்ள அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கு வைகப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2).நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21191/2021/AMRUT-2.0 நாள்.25.10.2021 கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

3).நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21191/2021/அம்ரூட்2 நாள் 13.11.2021 கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

## பொருள் எண் : 4

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21191/2021/AMRUT-2.0 நாள்.25.10.2021ல் 15வது மத்திய நிதிக்குழு (TIED-UN-TIED GRAND) திட்டத்தின் கீழ் உள்ளாட்சி பகுதிகளில் மக்கள் தொகையின் அடிப்படையில் இரண்டு வகைகளாக பிரித்து பொது மக்களின் பயன்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட உள்ள குடிநீர் பணிகள், திடக்கழிவு

மேலாண்மை பணிகள்,மழை நீர் வடிகால்,சிறுபாலம் கட்டுதல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் விபரங்களை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தருமபுரி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15வது மத்திய நிதிக்குழு (TIED,UN-TIED GRANT) திட்டத்தின் கீழ் 2020-2021ம் ஆண்டிற்கு ரூ.374.00லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21191/2021/அம்ரூட்2 நாள் 13.11.2021ல் நகராட்சிகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதிக்கு பணிகள் மேற்கொள்ள வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதை, தொடர்ந்து இந்நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட TIED GRANT 2020-2021க்கு ரூ.187லட்சத்தில் குடிநீர் திட்ட பணிகள்/திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் UN-TIED GRANT 2020-2021ம் ரூ.187லட்சத்தில் குடிநீர் திட்ட பணிகள்/திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.374.00லட்சத்தில் பணிகள் மேற்கொள்ள அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களுக்கு அனுப்பவும் மற்றும் UN-TIED GRANT 2020-2021ம் ஆண்டு திட்டத்தின் கீழ் 23 எண்ணிக்கை கழிவறைகள் மராமத்து பணிகள் மேற்கொள்ள குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோர நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கு வைகப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2).நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21191/2021/AMRUT-2.0 நாள்.25.10.2021 கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

3).நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21191/2021/அம்ரூட்2 நாள் 13.11.2021 கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**<u>பொருள் எண் : 5</u>**

தருமபுரி நகராட்சி புதிய அலுவலக கட்டிம் பகுதி-2 திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. நகராட்சி அலுவலகத்தின் முன்பகுதி மண் பகுதியாக உள்ளதால் பணியாளர்களின் வாகனங்கள் நிறுத்துவதாற்கும் மற்றும் வரி செலுத்த அலுவலக வரும் பொது மக்களின் வாகனங்கள் நிறுத்துவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது.17.09.2021 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் தருமபுரி அவர்கள் நகராட்சி அலுவலகத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போது அலுவலக முன்பகுதியினை ஆய்வுகள் மேற்கொண்டு மண் பகுதிகளை சரி செய்யுமாறு நேரடியாக அறிவுறுத்தப்பட்டதின் பெயரில், நகராட்சி முன்பகுதியில் உள்ள மண் பகுதியினை பேவர்பிளாக் அமைக்கவும், நகராட்சி அலுவலக கழிவறைகளை மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் கழிவு நீர் குழாய்களை பாதாள சாக்கடையுடன் இணைக்கும்

பணிகள் மேற்கொள்ள ரூ.10.00லட்சம் மதிப்பீட்டில் பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1).மன்றம் அனுமதிக்கலாம்,

2).பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ஆணையாளர் அவகளின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் : 6**

இந்நகராட்சிக்கு சொந்தமான நகர பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் (தென் கிழக்கு) சுங்க வசூல் இனத்திற்கு 22.01.2021, 18.02.2021, 30.06.2021, 15.07.2021, 10.08.2021, 08.10.2021, 20.10.2021, 29.10.2021 மற்றும் 09.11.2021 ஆகிய ஒன்பது தேதிகளில் 2021–2022 முதல் 2023–2024 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. ஐந்தாவது முறையாக 10.08.2021 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் மட்டும் திரு.என்.சரவணன் த/பெ நஞ்சப்பன் என்பவர் ரூ.19,13,300/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை குறைவாக இருப்பினும் துறைமூலம் வசூல் செய்தால் பணியாளர் ஊதியம் மின் கட்டணம் சுங்க கட்டணம் வசூல் புத்தக அச்சடிப்பு செலவு ஆகியவை ஏல தொகையைவிட கூடுதல் செலவு ஏற்பட்டு நகராட்சிக்கு இழப்பு ஏற்படுவதை தவிர்க்க திரு.என்.சரவணன் த/பெ நஞ்சப்பன் என்பவர் ரூ.19,13,300/–க்கு 10.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி மூலம் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. துறைமூலம் வசூல் செய்ய போதிய பணியாளர்கள் இல்லாததை கருதியும் ஒன்பதாவது பொது ஏலம் என்பதாலும் திரு.என்.சரவணன் த/பெ நஞ்சப்பன் என்பவர் ரூ.19,13,300/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து, 2022–2023 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும், 2022–2023 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2023–2024 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் : 7

இந்நகராட்சிக்கு சொந்தமான இராஜகோபால் பூங்கா சுங்க வசூல் இனத்திற்கு 22.01.2021, 18.02.2021, 30.06.2021, 15.07.2021 ஆகிய நான்கு தேதிகளில் 2021–2022 முதல் 2023–2024 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. நான்காவது முறையாக 15.07.2021 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் திரு.பி.சித்தன் த/பெ பச்சியப்பன் என்பவர் ரூ.2,25,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். நான்காவது ஏலத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டை காட்டிலும் குறைவாகவும், மூன்றாண்டு சராசரியை விட குறைவாகவும் கோரியுள்ளார். நான்காவது பொது ஏலம் என்பதால் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,25,000/–ஐ மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை குறைவாக இருப்பினும் துறைமூலம் வசூல் செய்தால் பணியாளர் ஊதியம் மின் கட்டணம் சுங்க கட்டணம் வசூல் புத்தக அச்சடிப்பு செலவு ஆகியவை ஏல தொகையைவிட கூடுதல் செலவு ஏற்பட்டு நகராட்சிக்கு இழப்பு ஏற்படுவதை தவிர்க்கவும், நான்காவது பொது ஏலம் என்பதாலும், துறைமூலம் வசூல் செய்ய போதிய பணியாளர்கள் இல்லாததை கருதியும், திரு.பி.சித்தன் த/பெ பச்சியப்பன் என்பவர் ரூ.2,25,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து, 2022–2023 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும், 2022–2023 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2023–2024 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் : 8

இந்நகராட்சிக்கு சொந்தமான புறநகர பேருந்து நிலைய எடை பார்க்கும் இயந்திரம் (தென்புறம்) உரிமம் இனத்திற்கு 22.01.2021, 18.02.2021, 30.06.2021, 15.07.2021 ஆகிய நான்கு தேதிகளில் 2021–2022 முதல் 2023–2024 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. நான்காவது முறையாக 15.07.2021 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் திரு.ஜி.வேடியப்பன் என்பவர் ரூ.10,205/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். நான்காவது

ஏலத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டை காட்டிலும் குறைவாகவும், மூன்றாண்டு சராசரியை விட கூடுதலாகவும் கோரியுள்ளார். நான்காவது பொது ஏலம் என்பதால் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.10,205/—ஐ மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை மூன்றாண்டு சராசரியை விட கூடுதலாகவும் நான்காவது பொது ஏலம் என்பதாலும், திரு.ஜி.வேடியப்பன் என்பவர் ரூ.10,205/—க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2021—2022 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து, 2022—2023 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும், 2022—2023 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2023—2024 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் : 9

இந்நகராட்சிக்கு சொந்தமான புறநகர் பேருந்து நிலைய எடை பார்க்கும் இயந்திரம் (வடபுறம்) உரிமம் இனத்திற்கு 22.01.2021, 18.02.2021, 30.06.2021, 15.07.2021, ஆகிய நான்கு தேதிகளில் 2021—2022 முதல் 2023—2024 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. நான்காவது முறையாக 15.07.2021 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் மட்டும் திரு.ஜி.வேடியப்பன் என்பவர் ரூ.15,075/—க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். நான்காவது ஏலத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டை காட்டிலும் குறைவாகவும் மூன்றாண்டு சராசரியை விட கூடுதலாகவும் கோரியுள்ளார். நான்காவது பொது ஏல. என்ன்தால் வரப்பெற்ற ஒப்புந்தப்புள்ளிதொகை 15,075./—ஐ மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை மூன்றாண்டு சராசரியை விட கூடுதலாகவும் நான்காவது பொது ஏலம் என்பதாலும், திரு.ஜி.வேடியப்பன் என்பவர் ரூ.15,075/—க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2021—2022 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து, 2022—2023 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும், 2022—2023 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2023—2024 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் : 10

இந்நகராட்சிக்கு சொந்தமான புறநகர பேருந்து நிலைய தொலைக்காட்சி வர்த்தக விளம்பர உரிமம் இனத்திற்கு 22.01.2021, 18.02.2021, 30.06.2021, 15.07.2021, 10.08.2021 08.10.2021, 20.10.2021, 29.10.2021 மற்றும் 09.11.2021 ஆகிய ஒன்பது தேதிகளில் 2021–2022 முதல் 2023–2024 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. நான்கு முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. ஐந்தாவது முறையாக 10.08.2021 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் திரு.ஜி.ராஜேந்திரன் த/பெ கோவிந்தன் என்பவர் ரூ.70,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். பின்னர் நான்கு தேதிகளில் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஐந்தாவது ஏலத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டை காட்டிலும் குறைவாகவும், மூன்றாண்டு சராசரியை விட குறைவாகவும் இருப்பினும் மேற்படி குத்தகை இனம் துறை மூலம் நடத்த இயலாது என்பதாலும், ஒன்பது முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் 10.08.2021 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு மேல் கூடுதல் தொகைக்கு ஏலம் கோர ஒருவரும் முன் வராத நிலையில், 10.08.2021 அன்று வரப்பெற்ற திரு.ஜி.ராஜேந்திரன் த/பெ.கோவிந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை குறைவாக இருப்பினும் துறைமூலம் நடத்த வழிவகை இல்லாததாலும் ஒன்பது முறை பொது ஏலம் நடத்தியும் கூடுதல் தொகைக்கு ஏலம் கோர ஒருவரும் முன் வராததால் 10.08.2021 அன்று வரப்பெற்ற திரு.ஜி.ராஜேந்திரன் த/பெ கோவிந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து, 2022–2023 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும், 2022–2023 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2023–2024 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் : 11

இந்நகராட்சிக்கு சொந்தமான சந்தைப்பேட்டை ரோடு கடைகள் எண்:24,25, பென்னாகரம் ரோடு கடைகள் எண் : 1,5,6 ( துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு முன்புறம்) ஆகிய கடைகளுக்கு 11.08.2021, 23.08.2021, 03.09.2021, 14.09.2021, 07.10.2021, 20.10.2021, 01.11.2021 ஆகிய தேதிகளில் 7 முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இவற்றில் மேற்கண்ட கடைகளுக்கு 5முறை நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிகழ்ச்சிகளில் எவரும் கலந்து கொள்ளவில்லை. மற்றும் ஒப்பந்தப்புள்ளியும் வழங்க முன்வரவில்லை. இந்நிலையில் 6 வது முறையாக 20.10.2021 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொது ஏலத்தில் ஒருவரும் கழந்துக்கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. பின்னர் 01.11.2021 அன்று மீண்டும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒருவரும் கழந்துக்கொள்ளவில்லை. தற்போது நகர்புற உள்ளாட்சி தேர்தலுக்கான தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளதாலும், மறு ஏலம் வைக்க போதிய கால அவகாசம் இல்லாததாலும், நகராட்சியின் வருவாய் கருத்தில் கொண்டு 20.10.2021 வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிவழங்கிய நபரின் விபரம் | கடை விபரம் மற்றும் கடை எண் | மாதவாடகை(GST நீங்கலாக ) |
|---|---|---|---|
| 1. | திரு.கோ.சரவணன்<br>தருமபுரி | பென்னாகரம் ரோடு<br>கடைஎண் 01 | ரூ.3225/– |
| 2. | திரு.கா.மகாலிங்கம்<br>தருமபுரி | பென்னாகரம் ரோடு<br>கடைஎண் 01 | ரூ.3100/– |
| 3 | திரு.எ.மணிவண்ணன்<br>தருமபுரி | பென்னாகரம் ரோடு<br>கடைஎண் 05 | ரூ.3200/– |
| 4 | திரு.கோட்டி<br>தருமபுரி | பென்னாகரம் ரோடு<br>கடைஎண் 05 | ரூ.3050/– |
| 5 | திரு.எ.மணிவண்ணன்<br>தருமபுரி | பென்னாகரம் ரோடு<br>கடைஎண் 06 | ரூ.3200/– |
| 6 | திரு.கோட்டி<br>தருமபுரி | பென்னாகரம் ரோடு<br>கடைஎண் 06 | ரூ.3060/– |
| 7 | திரு.சுரேஷ்<br>தருமபுரி | சந்தைபேட்டை ரோடு<br>கடைஎண் 24 | ரூ.4800/– |

| | | | |
|---|---|---|---|
| 8 | திருமதி.தீபா<br>தருமபுரி | சந்தைபேட்டை ரோடு<br>கடைஎண் 24 | ரூ.4350/— |
| 9 | திரு.சுரேஷ்<br>தருமபுரி | சந்தைபேட்டை ரோடு<br>கடைஎண் 25 | ரூ.4400/— |
| 10 | திருமதி. தீபா<br>தருமபுரி | சந்தைபேட்டை ரோடு<br>கடைஎண் 25 | ரூ.4600/— |

<u>அலுவலக குறிப்பு:</u>

1. பென்னாகரம் ரோடு மற்றும் சந்தை பேட்டை ரோடு ஆகிய பகுதியில் உள்ள மேற்படி கடைகளுக்கு 7முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தற்போது நகர்புற உள்ளாட்சி தேர்தலுக்கான தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளதாலும் மறு ஏலம் வைக்க போதிய கால அவகாசம் இல்லாததாலும் 20.10.2021 அன்று வரப்பெற்ற உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற உயர்ந்த பட்ச ஒப்பந்தபுள்ளியில் தெரிவித்துள்ள மாதவாடகைக்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளின் நிபந்தணைகளின் படி கடைகளை ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் : 12

இந்நகராட்சிக்கு சொந்தமான முகமது அலி கிளப் ரோடு வணிக வளாகம் கடை எண்— 9,12,13,14, மற்றும் 15 ஆகிய கடைகளுக்கு 10.08.2021, 24.08.2021, 03.09.2021, 08.10.2021 20.10.2021, 29.10.2021 ஆகிய தேதிகளில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கடை எண்— 9,12,13,14,15 ஆகியவற்றிற்க்கு 24.08.2021 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கடை எண்— 13,14,15 ஆகியவற்றிற்க்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையை குறைவாக இருந்ததால் மறு ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கடை எண்— 9,12 ற்க்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

பின்னர் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளில் 08.10.2021 அன்று நடைப்பெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துக் கொள்ளவில்லை. கடை எண் —13,14,15— ற்க்கு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது. தற்போது நகர்புற உள்ளாட்சி தேர்தலுக்கான தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளதாலும், மறு ஏலம் வைக்க போதிய கால அவகாசம் இல்லாததாலும், நகராட்சியின் வருவாய் கருத்தில் கொண்டு கடை எண்— 13,14,15 ஆகியவற்றிற்க்கு 08.10.2021 வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிவழங்கிய நபரின் விபரம் | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நாள் | கடை விபரம் மற்றும் கடை எண் | மாதவாடகை(GST நீங்கலாக ) |
|---|---|---|---|---|
| 1 | திரு. முத்தமிழன் தருமபுரி | 24.08.2021 | முகமது அலி கிளப் ரோடு வணிக வளாகம் கடைஎண் 09 | ரூ.9500/– |
| 2 | திருமதி.பிரபாவதி தருமபுரி | 24.08.2021 | முகமது அலி கிளப் ரோடு வணிக வளாகம் கடைஎண் 09 | ரூ.9200/- |
| 3 | திருமதி. சுபகீர்த்தி தருமபுரி | 24.08.2021 | முகமது அலி கிளப் ரோடு வணிக வளாகம் கடைஎண் 12 | ரூ.25100/– |
| 4 | திரு.முருகேசன் தருமபுரி | 24.08.2021 | முகமது அலி கிளப் ரோடு வணிக வளாகம் கடைஎண் 12 | ரூ.25000/– |
| 5 | திருமதி. பி.அமுதா தருமபுரி | 08.10.2121 | முகமது அலி கிளப் ரோடு வணிக வளாகம் கடைஎண் 13 | ரூ.7500/– |
| 6 | திரு.எ.மணிவண்ணன் தருமபுரி | 08.10.2121 | முகமது அலி கிளப் ரோடு வணிக வளாகம் கடைஎண் 13 | ரூ.7400/– |
| 7 | திருமதி. பி.அமுதா தருமபுரி | 08.10.2121 | முகமது அலி கிளப் ரோடு வணிக வளாகம் கடைஎண் 14 | ரூ.7600/– |
| 8 | திரு.ஆர்.கோட்டி தருமபுரி | 08.10.2121 | முகமது அலி கிளப் ரோடு வணிக வளாகம் கடைஎண் 14 | ரூ.7400/ |
| 9 | திரு.ஆர்.முருகேசன் தருமபுரி | 08.10.2121 | முகமது அலி கிளப் ரோடு வணிக வளாகம் கடைஎண் 15 | ரூ.7500/– |
| 10 | திருமதி. கோவிந்தம்மாள் தருமபுரி | 08.10.2121 | முகமது அலி கிளப் ரோடு வணிக வளாகம் கடைஎண் 15 | ரூ.7600/– |

<u>அலுவலக குறிப்பு:</u>

1. முகமது அலி கிளப் ரோடு வணிக வளாகம் பகுதியில் உள்ள மேற்படி கடைகளுக்கு 7முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தற்போது நகர்புற உள்ளாட்சி தேர்தலுக்கான தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளதாலும் மறு ஏலம் வைக்க போதிய கால அவகாசம் இல்லாததாலும் 08.10.2021 அன்று வரப்பெற்ற உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற உயர்ந்த பட்ச ஒப்பந்தபுள்ளியில் தெரிவித்துள்ள மாதவாடகைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளின் நிபந்தனைகளின் படி கடைகளை ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 13**

2021-2022ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள் மற்றும் கணினி டோனர்கள் மாவட்ட கூட்டுறவு அச்சக சேவை சங்க மூலம் வாங்கி கொள்ளவும், அச்சடித்துக் கொள்ளவும் தோராயான செலவீனம் ரூ.10.00 லட்சம் (ரூபாய். பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 14**

தருமபுரி மாவட்ட திடலில் நடைபெறும் 2021ம் ஆண்டு சுதந்திர தின விழாவிற்கு முன்னேற்பாடுகள் செய்யும் பணிக்கு 30.07.2021 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு விவரம் ரூ. |
|---|---|---|
| 1 | கே,மாணிக்கம் பந்தல் & சவுண்ட் சிஸ்டம் (உரிமை.எம்.முருகன்) | 3,06,000.00 |
| 2 | டி.தமிழரசன் | 3,42,500.00 |
| 3 | எம்.சக்திவேல் | 3,19,500.00 |

<u>அலுவலக குறிப்பு</u>

1).வரிசை எண் 1ல் கண்ட கே,மாணிக்கம் பந்தல் & சவுண்ட் சிஸ்டம் (உரிமை.எம்.முருகன்) குறைவாக வழங்கிய விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்

2).மேற்கண்ட பணிக்கு ஏற்படும் செலவினத் தொகை 3,06,000.00/-ஐ பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும்.பணி உத்தரவு வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண் : **15**

இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் பொது சுகாதாரப் பிரிவு தூய்மை பணியாளர்கள் 123 நபர்களுக்கு 2021-2022ம் ஆண்டிற்கான கை கழுவும் சோப்பு (மாதம் ஒன்று வீதம் 12 மாதங்களுக்கு 1476) வழங்க வேண்டியுள்ளது. பணியாளர்களுக்கு வழங்கும் லைபாய் சோப்பு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான தருமபுரி மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிமிடெட் மூலம் வாங்கி வழங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.50,000/-ம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் : **16**

**2021**ம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்நகராட்சி வார்டு உறுப்பினருக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தல் பணியில் ஈடுப்படுத்தப்படும் வாக்குசாவடி அலுவலல்கள், மண்டல அலுவலர்கள், வாக்கு எண்ணும் மைய அலுவலர்கள் மற்றும் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்க வேண்டியுள்ளது. மேலும் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள **33** வார்டுகளில் அமைக்கப்பட்டுள்ள **57** வாக்குசாவடி மையங்களுக்கு தேவையான எழுது பொருட்கள் வாங்குதல், படிவங்கள், கையேடு தயார் செய்தல், வாக்கு எண்ணும் மையத்திற்கு தேவையான பணிகள் மற்றும் தொடர்பான மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.**35.00** லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் : 17

தருமபுரி நகராட்சியில் உள்ள கணினிகள், பிரிண்டர்கள், ஸ்கேனர்கள் மற்றும் ஜெராக்ஸ் இயந்திரம் பழுது பார்க்கும் பணிக்கான ஆண்டு பராமரிப்பு பணிகள் 30.11.2021 உடன் முடிவடைவதால் 01.12.2021 முதல் 30.11.2022 வரையான காலங்களுக்கு ஆண்டு பராமரிப்பு செய்து தருமாறு இந்நகராட்சி உதவி கணினி திட்ட அலுவலர் அவர்களின் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, கணினிகள், பிரிண்டர்கள், ஸ்கேனர்கள் மற்றும் ஜெராக்ஸ் இயந்திரம் பழுது பார்க்கும் பணிக்கான ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஏற்படும் தோராய செலவினத் தொகை ரூ.4.00 லட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்
மற்றும் ஆணையாளர்
தருமபுரி நகராட்சி

**2021ஆம் வருடம் நவம்பர் மாதம் 17.11.2021ம் நாள் புதன் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசர கூட்ட தீர்மான நகல்**

| பொருள் எண்கள் | தீர்மான எண்கள் | நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம் |
|---|---|---|
| பொருள் : 1 முதல் 17 வரை | 171 முதல் 187 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனி அலுவலர்
மற்றும் ஆணையாளர்
தருமபுரி நகராட்சி

**2021ஆம் வருடம் நவம்பர் மாதம் 30.11.2021ம் நாள் செவ்வாய் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள சாதாரணகூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை :திருமதி. எஸ்...சித்ரா எம்.காம்.,பி.எட்**
**ஆணையாளர், தருமபுரி நகராட்சி**

**பொருள் எண் : 1**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 30ல் பச்சையம்மன் கோவில் எரி வாயு தகனமேடைக்கு **GAS (LPG) FIRING SYSTEM TO THE EXESTING GASIFIER** ஆக மாற்றியமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றது.எனவே **GAS CYLINDER** பாதுகாக்க பாதுகாப்பு அறை அமைக்கவும், மேலும் மேற்கண்ட பகுதியில் SOLAR EVAPORATION PAN தொட்டியில் இருந்து வரும் கழிவுகளை அகற்ற வேண்டியுள்ளது. இந்த SOLAR EVAPORATION PAN உடனடியாக அமைத்தல் மட்டுமே CONSENT OPERATE வழங்க முடியும் என தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தருமபுரி அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே SOLAR EVAPORATION PAN அமைக்கும் பணியினை மேற்கொள்ள ஏற்படும் செலவின தொகை ரூ.3.00லட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1).மன்றம் அனுமதிக்கலாம்
2).பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர்/ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் : 2**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 30ல் பச்சையம்மன் கோவில் எரி வாயு தகனமேடைக்கு **GAS (LPG) FIRING SYSTEM TO THE EXESTING GASIFIER** ஆக மாற்றியமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றது.எனவே **GAS CYLINDER** பாதுகாக்க பாதுகாப்பு அறை அமைக்கவும், மேலும் மேற்கண்ட பகுதியில் SOLAR EVAPORATION PAN தொட்டியில் இருந்து வரும் கழிவுகளை அகற்ற வேண்டியுள்ளது. இந்த SOLAR EVAPORATION PAN உடனடியாக அமைத்தல் மட்டுமே CONSENT OPERATE வழங்க முடியும் என தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்

தருமபுரி அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே SOLAR EVAPORATION PAN அமைக்கும் பணிக்கு 24.09.2021 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | **ஒப்பந்தப்புள்ளி** விலை விகித விவரம் |
|---|---|---|
| 1 | திரு.டி.எஸ்.ஜப்பார் | 0.15% மதிப்பீடைவிட அதிகம் |
| 2 | திரு.ஜ.பயாஸ் | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u>

வரிசை எண்1ல் கண்ட திரு.ஜ.பயாஸ் அவர்களின் மதிப்பீட்டைவிட குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்ற அனுமதிக்குவைக்கப்படுகிறது.

**பொருள் எண் : 3**

தருமபுரி நகராட்சி புதிய அலுவலக முன்பகுதியில் உள்ள மண் பகுதிக்கு பேவர்பிளாக் அமைக்கும் பணி, கழிவறைகள் மற்றும் கழிவு நீர் குழாய்களை பாதாள சாக்கடையுடன் இணைக்கும் பணிக்கு 01.10.2021 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | **ஒப்பந்தப்புள்ளி** விலை விகித விவரம் |
|---|---|---|
| 1 | திரு.டி.எஸ்.ஜப்பார் | 0.20% மதிப்பீடைவிட குறைவு |
| 2 | திரு.ஜெ.பயாஸ் | 0.70% மதிப்பீட்டைவிட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

வரிசை எண்1ல் கண்ட திரு.டி.எஸ்.ஜப்பார் அவர்களின் மதிப்பீட்டைவிட குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்ற அனுமதிக்குவைக்கப்படுகிறது.

பொருள் எண் : 4

தமிழ்நாடு தகவல் தொழில் நுட்ப மின்னனு சேவை வழங்கல் விதிகள் 2016 ( Tamil Nadu InformationTechnology, Electronic Service Delivery Rules 2016) விதி 5, துணை விதி (1) ன் மூலம் தருமபுரி நகராட்சியின் கீழே குறிப்பிட்டுள்ள சேவைகள், அட்டவணையில் தெரிவித்துள்ளபடி மின்னனு சேவை விநியோக (Electronic Service Delivery System) அமைப்பின் கீழ் https://tnurbanepay.tn.gov.in/ என்ற இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது

| வரிசை எண் | மின்னனு முறையில் வழங்கக்கூடிய பொது சேவைகளின்பெயர் | | | சேவையை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி |
|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 |
| | | ii | புதிய குடிநீர் இணைப்புக்கான கட்டணம்<br>Payment for New Water Supply Connection | |
| 2 | தடையின்மை சான்றுக்கான விண்ணப்பம்<br>Apply for NOC/ Clearance | i | திரைப்பட படப்பிடிப்புக்கான விண்ணப்பம்<br>Application for movie shooting | |
| | | ii | குடிநீர் இணைப்புக்கான தடையின்மை சான்று (தொழிற்சாலை)<br>NOC for Water Connection (Industrial) | |
| | | iii | திரைப்பட படப்பிடிப்பு கட்டணம்<br>Movie Shooting Payment | |
| | | iv | திரைப்பட படப்பிடிப்புக்கு தடையின்மை சான்று<br>NOC for Movie Shooting | |
| | | v | பாதாளசாக்கடை இணைப்புக்கான தடையின்மை சான்று (தொழிற்சாலை பயன்பாடு)<br>NOC for UGD Connection for Industrial | |
| 3 | சுகாதார சான்றிதழ்<br>Sanitation Certificate | i | சுகாதார சான்றிதழ்<br>Sanitation Certificate | |
| 4 | கட்டிட அனுமதி<br>Building Plan Approval | i | கட்டிட அனுமதி பணிக்கான முன்னேற்றம்<br>Building Plan Work Progress | |
| | | ii | கட்டிட அனுமதி இறுதி கட்ட பணி முன்னேற்ற அறிக்கை<br>Building Plan Work Progress Last Story | |
| | | iii | வரி மதிப்பீட்டிற்கான நிறைவு அறிக்கை<br>Complete report for Tax Assessment | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | iv | மனைப்பிரிவு அங்கீகார கட்டணம்<br>Layout Approval Payment | நகராட்சி ஆணையாளர் |
| | | v | மனைப்பிரிவு அங்கீகாரம் கோருதல்<br>Layout Approval Request | |
| | | vi | வேலை தொடங்குவதற்கான அறிவிப்பு<br>Notice for Commencement Work | |
| | | vii | கட்டிடம் இடிக்க அனுமதி<br>Permission for Demolition for Building | |
| | | viii | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிம கட்டணம்<br>Planning Permission with Building License Payment | |
| | | ix | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமம் (12 மீட்டருக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below12 Mts) | |
| | | x | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமம் (1200 சதுர அடிக்கு கீழ்)<br>Planning Permission with Building License (Below 1200 Sq.Ft) | |
| | | xi | தொழில் நுட்ப வல்லுநர்/ மேம்பாட்டாளர்கள் பதிவு<br>Registration of Professionals/Developers | |
| | | xii | தொழில் நுட்ப வல்லுநர்/ மேம்பாட்டாளர்கள் சான்றிதழ் பதிவு<br>Registration of Professional/Developers Certificate | |
| | | xiii | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கோரிக்கை<br>Renewal Building Plan Request | |
| | | xiv | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கட்டணம்<br>Renewal Building Plan Payment | |
| | | xv | தொழில் நுட்ப வல்லுநர்/ மேம்பாட்டாளர்கள் புதுப்பித்தல் பதிவு<br>Renewal Registration of Professional/Developer | |
| | | xvi | இயந்திர உரிமத்திற்கான கோரிக்கை<br>Request for machinery License | |
| **5** | வர்த்தக உரிமம்<br>Trade License | i | தொழில் உரிமம் பதிவு – தேடல்<br>Trade Registration – Search | |
| | | ii | தொழில் உரிமம் புதுப்பித்தல் – தேடல்<br>Trade Renewal - Search | |
| **6** | சொத்துவரி<br>Property Tax | i | வரி விதிப்பு முழு விவரம்<br>View Assessment History | |
| | | ii | வரி விதிப்பு விவரம் காண<br>View Assessment | |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | தொழில்வரி<br>Professional Tax | i | புதிய தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை<br>New Assessment request | நகராட்சி ஆணையாளர் |
| | | ii | தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை மீள சமர்ப்பித்தல்<br>Return Submission | |
| 8 | பிறப்பு மற்றும் இறப்பு<br>Birth & Death | i | எனது சான்றிதழ்<br>My Certificate | |
| 9 | சாலை துண்டிப்பு<br>Road Cutting | i | சாலை துண்டிப்பு அனுமதி<br>Road Cutting Permission | |
| | | ii | சாலை துண்டிப்பு கட்டணம்<br>Road Cutting Payment | |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண் : 5**

தருமபுரி நகராட்சியில் தமிழக அரசு வழிகாட்டுதலின் படியும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் வழிகாட்டுதலின் படியும் பல்வேறு வகையான காய்ச்சல்கள் மற்றும் தடுப்பு முறைகள் குறித்து பொது மக்கள் அறியும் வகையில் மாலைமலர், தினத்தந்தி, தினகரன், தினசெய்தி மற்றும் தினபூமி நாளிதழ்கள் தொழில் மலர் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் செய்யபட்டதற்கு உண்டான தொகை ரூ.71,645/—ஐ நாளிதலுக்கு வழங்க நகர் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நாளிதழ் பெயர் | | தொகை |
|---|---|---|---|
| 1 | மாலைமலர் நாளிதழ் | : | 9,975 |
| 2 | தினத்தந்தி நாளிதழ் | : | 21,420 |
| 3 | தினகரன் நாளிதழ் | : | 20,475 |
| 4 | தினசெய்தி நாளிதழ் | : | 9,975 |
| 5 | தினபூமி நாளிதழ் | : | 9,800 |
| | மொத்தம் | : | 71,645 |

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் : 6

அரசாணை (நிலை) எண் 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007 ல் நகராட்சிக்கு சொந்தமான கடைகளை அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒருமறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமம் பெயர் மாற்றம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக விண்ணப்பதாரர் 12 மாதங்களுக்குறிய மாதாந்திர குத்தகை தொகை சமமான தொகையை முன்பணமாக செலுத்த வேண்டும். இது தவிர, விண்ணப்பகட்டணம் மற்றும் 12 மாத வாடகைக்கு சமமான தொகையை பெயர் மாற்ற கட்டணமாகவும் அவர் செலுத்த வேண்டும். அதன்படி கீழ்கண்ட விவரப்படியான கடைகளின் அனுமதியற்ற அனுபோகதாரர்கள் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை செலுத்தி உள்ளார்கள். மேற்கண்ட அரசாணை மற்றும் குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டு கணினி மென்பொருளில் கீழ்காணும் கடைகளின் குத்தகை உரிமம் பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | உரிமம் எண் | கடை அமைந்துள்ள தெருவின் பெயர் மற்றும் கடை எண் | பழைய குத்தகை தாரர்களின் பெயர் | பெயர் மாற்றம் செய்ய வேண்டிய குத்தகை தாரர்களின் பெயர் | பெயர் மாற்றம் செய்யப்பட்ட உத்தரவு எண், நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 037/3156 | சாலைவிநாயகர் கோவில் ரோடு, கடை எண்– 3 (தென்புறம்) | திரு.வி. செல்வகுமார் | திரு.வி.விஜயகுமார் | ந.க.எண் 781/2020/அ3 நாள் 30.11.2021 |
| 2 | 037/3054 | சின்னசாமி தெரு கடை எண்– 3 | திரு.எம். மாதேஸ் | திரு.எம்.திருப்பதி | ந.க.எண் 781/2020/அ3 நாள் 30.11.2021 |
| 3 | 037/3275 | நாட்சியப்பன் தெரு கடை எண்– 1 | திரு.எண். ஜெயபிரகாஸ் | திரு.ஜே. சரவணகுமார் | ந.க.எண் 1036/2021/அ3 நாள் 30.11.2021 |
| 4 | 037/3295 | சாலைவிநாயகர் கோவில் ரோடு, (தொலைக்காட்சி நிலைய கட்டிடம்) | திரு.கே. முருகன் | திரு.எம்.சிவபாலாஜி | ந.க.எண் 763/2017/அ3 நாள் 30.11.2021 |
| 5 | 037/3277 | நாட்சியப்பன் தெரு கடை எண்– 3 | திரு.டி.எஸ்.ரவி | திரு.சி.சித்தராஜ் | ந.க.எண் 1038/2021/அ3 நாள் 30.11.2021 |
| 6 | 037/3345 | சந்தைபேட்டை சூப்பர்மார்கெட் கட்டிடம் | திரு.எஸ். குருசாமி | திருமதி. சென்னம்மாள் | ந.க.எண் 1038/2021/அ3 நாள் 30.11.2021 |
| 7 | 037/3086 | ஆறுமுகம் தெரு, கடை எண்– 4 (தென்புறம்) | திரு.கே. கோபால்செட்டி | திரு.கே. காளியப்பன் | ந.க.எண் 1038/2021/அ3 நாள் 30.11.2021 |
| 8 | 037/3169 | அண்ணாதுறை ரோடு கடை எண்– 2 | திரு.கே. ஆனந்தன் | திரு.கே. காளியப்பன் | ந.க.எண் 1038/2021/அ3 நாள் 30.11.2021 |
| 9 | 037/BD01/ 00078 | ஆறுமுகம் தெரு கடை எண்– 12 (வடபுறம்) | திரு.வி. வெங்கடேசன் | திரு.டி,கே. ரித்திக்ரோஷன் | ந.க.எண் 1038/2021/அ3 நாள் 30.11.2021 |
| 10 | 037/3098 | ஆறுமுகம் தெரு கடை எண்– 16 (தென்புறம்) | திரு.எ.பி. பெரியசாமி | திருமதி. சின்னபொண்ணு | ந.க.எண் 1038/2021/அ3 நாள் 30.11.2021 |

<u>அலுவலக குறிப்பு:</u>

அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 7**

தலைமையாசியர் நகராட்சி டவுன் தொடக்கப்பள்ளி 11.08.2021 கடிதத்தில் பள்ளி கட்டிடத்தின் மேற்கூரையில் மழை நீர் தேங்கி பள்ளி வகுப்பறையில் சேதம் ஏற்படவதாகவும்,மேலும் கொரோனோ நோய் தொற்று கராணமாக பள்ளிகள் திறக்கப்படாமல் உள்ளது. தற்போது தமிழக அரசு பள்ளிகள் திறக்க வாய்ப்புள்ளதாக தெவிக்கப்பட்டுள்ளதால் மாணவ,மாணவியரின் நலனை கருதி கட்டிடத்தின் மேற்கூரையினை சரி செய்து தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கிழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.டி.எஸ்.ஜப்பார் அவர்களின் மூலம் இப்பணியினை ரூ.2.60லட்சம் மதிப்பீட்டில் கல்வி நிதியின் கிழ்மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு-</u>**

மன்றம் பதிவு செய்யலாம்

**பொருள் எண் : 8**

தருமபுரி நகராட்சியில் பொறியாளர் பிரிவில் உள்ள பேட்டரிகள் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ள 29.07.2021 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீராம் எலட்ரிக்கல் தருமபுரி | 0.05%மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | ஜி.எம்.ஜி.டேல் சிஸ்டம் | 0.01%மதிப்பீட்டைவிட அதிகம் |
| 3 | அருண் எலட்ரிக்கல்ஸ் தருமபுரி | 0.01%மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1).வரிசை எண் 1ல் கண்ட **ஸ்ரீராம் எலட்ரிக்கல் தருமபுரி** அவர்களின் குறைந்த விலைப்புள்யினை மன்றம் அனுமதிக்கலாம்.
2).மேற்கண்ட பணிக்கு ஏற்படும் செலவினத் தொகை ரூ.2.60லட்சத்தினை பொது நிதியின் கிழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் : 9**

உதவி இயக்குனர் உள்ளாட்சி நிதி தணிக்கை தருமபுரி அவர்களின் நேரடி அறிவுரையில் தருமபுரி நகராட்சியின் 2020-2021ம் ஆண்டு வருவாய் நிதி, குடிநீர் நிதி, கல்வி நிதியின் தணிக்கை 01.11.2021 முதல் தொடங்கப்படவுள்ளதாகவும், திரு.ஜெ.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மூலம் ஆண்டு கணக்குகளை முடித்து தணிக்கைக்கு உட்படுத்துமாறு நேரடியாக தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்கண்ட நபர் மூலம் 2020-2021ம் ஆண்டு வருவாய் நிதி, குடிநீர் நிதி, கல்வி நிதி

கணக்குகள் முடித்து ஆண்டு கணக்குகள், தணிக்கை அறிக்கைகள் மற்றும் தணிக்கை பத்திகள் தயார் செய்யது நகல் எடுக்கவும், தணிக்கைக்கு தேவையான எழுதுபொருட்கள் வாங்க வேண்டியிருப்பதால் அதற்காக ஏற்படும் தோரய செலவினத் தொகை ரூ.2.00லட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 10**

தருமபுரி நகராட்சியில் திட்டப்பணிகள்,நகராட்சி தொடர்பான சாதனைகள்,முக்கிய பிரமுகர்கள் வருகை,பொது நிதி,குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு மாநில அளவில் மற்றும் தென்னிந்திய அளவில் ஒப்பந்தப்புள்ளி பெற விளம்பரம் செய்ய வேண்டியிருப்பதால் அதற்கான ஏற்படும் செலவினம் **ரூ.10.00** லட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**.பொருள் எண் : 11**

தருமபுரி நகராட்சி பகுதிகளில் உள்ள வார்டுகளில் மினி பவர் பம்புகள் பழுதாகி பொது மக்கள் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளதால் மேற்கண்ட வார்டுகளில் உள்ள பொதுமக்கள் குடிநீருக்கு மிகவும் சிரமமாக உள்ளதாகவும் உடனடியாக பழுதுகள் ஏற்பட்டுள்ள மினி பவர்பம்பினை சரி செய்து தருமாறு கோரிக்கை வைக்கப்பட்டதின் பெயரில் மேற்கண்ட பகுதியில் நேரடி ஆய்வுகள் செய்யப்பட்டதில் 1 முதல் 17 வார்டுகளிலுள்ள மினி பவர்பம்புகள் பழுதடைந்து பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட 1 முதல் 17 வார்டுகளிலுள்ள மினி பவர்பம்புகளை சரி செய்து பொது மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டியிருப்பதால், இப்பணி குடிநீர் பணி என்பதால் இப்பணியினை அசவர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ரூ.8.30 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதியின் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.கே.முழுமதி அவர்கள் மூலம் பணியினை மேற்கொண்டதினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது,

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் : 12

தருமபுரி நகராட்சி பகுதிகளில் உள்ள வார்டுகளில் மினி பவர்பம்புகள் பழுதாகி பொது மக்கள் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளதால் மேற்கண்ட வார்டுகளில் உள்ள பொதுமக்கள் குடிநீருக்கு மிகவும் சிரமமாக உள்ளதாகவும் உடனடியாக பழுதுகள் ஏற்பட்டுள்ள மினி பவர்பம்பினை சரி செய்து தருமாறு கோரிக்கை வைக்கப்பட்டதின் பெயரில் மேற்கண்ட பகுதியில் நேரடி ஆய்வுகள் செய்யப்பட்டதில் வார்டுகள் 18 - 33 வார்டுகளில் உள்ள எண்ணிக்கை மினி பவர்பம்புகள் பழுதடைந்து பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட 18 - 33 வார்டுகளினுள்ள மினி பவர்பம்புகளை சரி செய்து பொது மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டியிருப்பதால், இப்பணி குடிநீர் பணி என்பதால் இப்பணியினை அசவர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ரூ.7.30 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதியின் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.டி.எஸ்.ஜப்பார் அவர்கள் மூலம் பணியினை மேற்கொண்டதினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது,

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் : 13

தருமபுரி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெரு விளக்குகள் பராமரிப்பு பணிகள் ஒப்பந்தம் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு 16.06.2021 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | **விலைப்புள்ளி** விலை விகித விவரம் |
|---|---|---|
| 1 | M/S.Quality Engineeing | **4.49**% மதிப்பீடைவிட குறைவு |
| 2 | DNR Electricals Contractior | **6.33**% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 3 | Diya Electricals | **9.10**% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1).வரிசை எண்1ல் கண்ட M/S.Quality Engineeing அவர்களின் மதிப்பீட்டைவிட குறைவாக வழங்கிய விலைப்புள்ளியினை மன்ற அனுமதிக்குவைக்கப்படுகிறது.

2).பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

3).மேற்கண்ட பணிக்கு ஏற்படும் செலவினத் தொகை **ரூ.0.61** லட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

தனி அலுவலர்
மற்றும் ஆணையாளர்
தருமபுரி நகராட்சி

**2021ஆம் வருடம் நவம்பர் மாதம் 30.11.2021ம்** நாள் செவ்வாய் கிழமை
தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள சாதாரணகூட்ட தீர்மான நகல்

| பொருள் எண்கள் | தீர்மான எண்கள் | நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம் |
|---|---|---|
| பொருள் : 1 முதல் 13 வரை | 188 முதல் 200 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனி அலுவலர்
மற்றும் ஆணையாளர்
தருமபுரி நகராட்சி